# முருகனின் அருள் பெறுவதற்கு உரிய எளிய வழிகள்



மானிடப்பிறப்பு மகத்தானது தான். ஆனால் அதில் முழுமை பெற்றவர் சிலர் தானே ! உடல், உள்ளம், ஆன்மா, மூன்றிலும் வளர்ச்சி பெற்று முதிர்ந்தவர்களையே முழு மனிதர்களாகக் கொள்ள முடியும். உடல் வளர்ச்சிக்கு உணவும், உடற் பயிற்சியும் வேண்டும். உள்ள வளர்ச்சிக்குக் கல்வியும், சிந்தனையும் வேண்டும்; ஆன்மிக வளர்ச்சிக்கு அரிய கடவுட் கொள்கையும், பெரிய சமய நெறிகளும் வேண்டும். நாட்டில் உடல் வளர்ச்சியுள்ளோர் நிறைய உண்டு. உள்ள வளர்ச்சி உள்ளவர்கள் கூட ஓரளவு உண்டு. ஆனால் செந்நெறியும் சமயமும் போற்றி ஏத்தும் புண்ணிய சீலர்கள் சிலரே ! ஆண்டவனையும், அவன் பாலித்த அருளையும் அண்டியவர் மிகச் சிலர் பலராகப் பல்கிப் பெருகும் போதுதான் அல்லன குறைந்து நல்லன வளர, மருள் நீங்கி, அருள் ஓங்க வாய்ப்புண்டு. சுருங்கக் கூறின், நெறியோடு கூடிய உருப்படியான ஒரு சமுதாயத்தை உருவாக்க ஆன்மிகம் அடித்தளமாக அமைகிறது என்றால் மிகையாகாது.

அந்த வகையில், தமிழகத்தில் ஆன்மிகத்தையும், அறநெறியையும் பரப்ப, பாம்பன் என்னும் சிற்றூரில் பிறந்தவர் அப்பாவு எனும் பெயர் கொண்ட ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ஆவர். பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஒரு சிறந்த ஞானி. ஜீவன் முத்தராய் வாழ்ந்து சென்னை திருவாய்மியூரில் குகசாயுச்சிய நிலையில் இருந்து கொண்டு நமக்கு அருள்பாலிப்பவர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள். இவர் முருகனின் மீது 6666 பாடல்கள் இயற்றியுள்ளார்கள். அவற்றில் ஒன்று பெருவேண்டுகோள் என்ற பதிகமாகும். இப்பெருவேண்டுகேள் என்னும் பதிகம் ஆறாவது மண்டலமாகிய ஸ்ரீமத் குமார சுவாமியத்தில் பலதிறப் பொருட்காண்டத்தில் வருகிறது. இப்பதிகத்தில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் முருகப் பெருமான் அடியார்க்கு வந்து அருள்புரிந்த நிகழ்ச்சி இடம் பெறுகிறது. இப்பதிகத்தில கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் நடந்த நிகழ்ச்சிகள் ஆகும். அந்நிகழ்ச்சிகளைச் சுவாமிகளின் சரித்திர வாயிலாகவும், ஏனைய இலக்கியங்கள் வாயிலாகவும் நன்கு ஆராய்ந்து விளக்கப் பகுதியை முனைவர் ப. இராமன் அவர்கள் கொடுத்துள்ளார்கள்.

### பெருவேண்டுகோள்

கண்ணாயிர முடையான்முளை கனவிற்சர ணார்கண்
எண்ணாயிர முடையூர்தியி ருந்தேசிறை மீட்பேன்
உண்ணாய்துய ரென்றோதிய வுடையாயொளிர் பூவல்
வண்ணாவயின் மன்னாவெனை மறவேலெனை மறவேல் 1

அறிவேறுசை கீசவ்விய னார்சீடன டங்கா
நெறியாலணை யைம்பாதக நெடிலைக்களை யிறைவா
பொறியாயரு ணிலையாயதி புனிதாவயின் முதல்வா
வறிதேதுமில் குமராவெனை மறவேலெனை மறவேல் 2

முருகாவயின் முருகாவென மொழியும்மொரு மாதின்
ஒருகாதல னவள்கையினை யுதிரம்பெரு கரிகால்
அருளாலது வளரும்படி யயர்தண்ணளியாளா
மருமாலைகொண் மார்பாவெனை மறவேலெனை மறவேல் 3

வெறிவண்டிசை பாடும் பொழில் வேலூரினை யாளும்
பொறிதங்கிய புகழானலி யக்கோடனு றங்கும்
நெறிவந்தலர் வேலேவுதி நெரியும்பகை யென்ற
மறியின்கதை தலைவாவெனை மறவேலெனை மறவேல் 4

திங்கட்சடை யவன் மங்களை திகழுஞ்சிவ கோச
மங்கைக்கும ரேசற்றொழு தான் வைகிட னெய்தி
அங்கைக்கிடு வால்வல்சிய யின்றோதிம றைந்த
மங்குற்பகை மணியேயெனை மறவேலெனை மறவேல் 5

எளியேனவி றமிழ்மாலையி யம்போர்பொழு தென்முன்
அளியாலது வென்னான்முடி யாதோவென வினவிக்
களியோடுக ரந்தாயிது காறுங்கொள லறியேன்
வளியூரொரு தேராவெனை மறவேலெனை மறவேல் 6

மாடாடுகள் பல்குந்திரு வளமேவுபி ரப்பைக்
காடாரிட மதினானடி கருதும்பொழு தெதுவும்
ஊடாடலி லாமேயொரு மொழியோதிம றைந்த
வாடாமுக முனியேயெனை மறவேலெனை மறவேல். 7

உரனந்திய பலவைணவ ருரனார்சிவ நெறியை
நிரல்விஞ்சிய பலநிந்தைசெய் தெய்குந்துயர் தரலைத்
திரன்விஞ்சிய வதிகாரிமு னொழியும்படி செய்தாய்
வரமஞ்சிகை முருகாவெனை மறவேலெனை மறவேல் 8

பரிவாளர்க ளங்கோதொரு பஞ்சாமிர்த வண்ணம்
இரியாவென துளநச்சினி தாமென்றொரு கிழமைப்
பெரியாண்முனம் வந்தோதிய செந்திற்பெரு மானே
வரிமாமறை பிறைவாவெனை மறவேலெனை மறவேல். 9

முழுநாரொடு புகழ்பாடிய முனிவற்கரு ரேசெய்
தொழுநோயற வேசெய்தொரு சுகநல்கிய துரையே
கழுகோதிய லமர்வேலவ கருணாகர முருகா
வழுவாவழி முதல்வாவெனை மறவேலெனை மறவேல் 10

மேற்கண்ட பாடலின் விளக்கம் பின்வருமாறு :–

உடம்பிலே ஆயிரம் கண்களை யுடைய இந்தினின் மகனான சயந்தன் கனவில் பல்லாயிரம் கண்கள் கொண்ட தோகையை உடைய மயில்மீது எழுந்தருளி யாம் உன்னைச் சிறை மீட்போம். துயரப்படாதே என்று கூறிய இறையவனே ! ஒளிவீசும் செம்மேனி யுடையவனே ! வேலிறைவனே ! எனை மறவேல் ! எனை மறவேல் !

ஞானத்தால் மிக்க கைசீசவ்விய முனிவரின் சீடன் ஒருவன், அறநெறி நில்லாமையால் அவனைப் பற்றிய பொய், கொலை, கள், களவு, காமம் ஆகிய ஐம்பெருந் தீவினைகளின் வலியைக் களைந்த இறைவனே ! ஞான வடிவனே ! அருள் நிலையனே ! மிக்க தூய்மையில் விளங்குபவனே ! வேலிறைவனே ! அறியாமை ஏதும் தீண்டாத குமாரப் பிரபுவே ! எனை மறவேல் எனை மறவேல்!

முருகா ! வேல் முருகா ! என்று கூறும் ஒரு பெண்மணியின் கணவன் அவள் கையைக் குருவி பெருக வெட்டியபோது, அந்தக் கை வளரும்படி அருள்செய்த தண்ணளியுடைவனே! மணமுடைய மாலை அணிந்த திருமார்பினனே ! எனை மறவேல் ! எனை மறவேல் !



தேனையுண்டு வண்டுகள் இசைபாடும் சோலைகள் உள்ள வேலூரை ஆண்டுவந்த திருமகள் தங்கி புகழுடைய நல்லியக் கோடன் என்னும் அரசன் உறங்கும் போது அவன் கனவில் எழுந்தருளி வயலில் உள்ள மலர்களையே வேல்களாகக் கொண்டு ஏவுதி ! பகைவர் அழிவர் என்று கூறிய வள்ளிப் பிராட்டியின் தலைவனே ! எனை மறவேல் ! எனை மறவேல் !

பிறையணிந்த சடையுடைய சிவபிரானும் அவன் தேவி மங்களேசுவரியும் எழுந்தருளியுள்ள திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்தில் நின்னை வழிபட்ட கார்த்திகை சுவாமிகள் இல்லம் அடைந்து அவர் நின் கையிலிட்ட தூய உணவையுண்டு அவருக்குக் கூறவேண்டுவன கூறி மறைந்தவனே ! இருளாகிய மலத்தின் பகையாய் விளங்கும் மணியே ! எனை மறவேல் ! எனை மறவேல் !

எளியேன் பாடிய தமிழ்ப் பாடல்களை நின் திருமுன் ஓதிய காலை என்முன் தோன்றி நீ விரும்பும் ஆன்மலாபத்தைத் தர என்னால் முடியாதோ என்று அருளோடு வினவி மறைந்தவனே ! இதுகாறும் நீ என்னை ஆட்கொள்ளுமுறை அறிகிலேன். காற்றுக் கடவுள்

சிவத்தமிழ் குகமணி தெ. தனபால்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

கடவுகின்ற ஒப்பற்ற தேரை உடையவனே ! எனை மறவேல் ! எனை மறவேல் !

மாடுகளும் ஆடுகளும் பெருகிவரும் மேலான வளமுடைய பிரப்பன்வலசை நன்காட்டில் நினது திருவடியைச் சிந்தித்திருந்த காலை எவ்வித ஊடலும் இன்றி எழுந்தருளி ஒருமொழி ஓதி மறைந்த மலர்ந்த முகமுடைய முனியே ! எனை மறவேல் ! எனை மறவேல் !

பெருமை குலைந்த வைணவர் ஞானம் நிரம்பிய சிவநெறியை எண்ணற்ற நிந்தைகள் செய்து எனக்கும் துயர் தருதலை வலிமையுடைய அதிகாரியால் ஒழியும் படி செய்தவனே ! மேன்மையுடைய குண்டலம் அணிந்த முருகனே ! எனை மறவேல் ! எனை மறவேல் !

திருச்செந்தூரில் அன்பர்கள் ஓதிய பரிபூரண பஞ்சாமிர்த வண்ணம் அழிவற்ற என் உள்ளம் விரும்பும் இனிமையுடையது என்று உள் அடியவளாகிய முத்தம்மையார் என்னும் மூதாட்டியின்பால் வந்து கூறியருளிய செந்தில் இறைவனே ! ஒழுங்கும் பெருமையுமுடைய வேதங்களின் தலைவனே ! எனை மறவேல் ! எனை மறவேல் !

நினது திருவடிக்கண் முழு அன்போடு திருப்புகழை அருளிச் செய்த அருணகிரிநாத முனிவரை வருத்திய தொழுநோய் நீங்குமாறு செய்து ஒப்பற்ற பேரின்பத்தை வழங்கிய துரையே ! கழுகுமலையில் எழுந்தருளியுள்ள வேலவனே ! அருளே திருமேனியாகக் கொண்ட முருகனே ! பிழைபடாத நன்னெறியின் முதல்வனே ! எனை மறவேல் ! எனை மறவேல் !.

பாடலின் மையக் கருத்து என்ன ?

நம்முடைய குடும்பத்தில் நமக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். பெரிய குழந்தைக்கு வயது 10; ஆண் மகன். இரண்டாவது குழந்தைக்கு வயது 5; பெண் மகள். பெற்றோர் அந்தக் குழந்தைகளுக்கு பல வகைப்பட்ட உணவுப் பண்டங்களை வாங்கி தருகின்றனர். அப்போது சிறிய குழந்தை தன்னுடைய அண்ணன் வைத்திருந்த உணவினை தனக்கும் வேண்டும் என்று கேட்கும் போது, பெரிய குழந்தையாகிய அண்ணன் தன்னுடைய தங்கைக்கு அந்த உணவினைக் கொடுக்கச் சிறிது தயங்குவான் அல்லது கொடுக்க மாட்டான். இது சிறு குழந்தைகளின் சுபாவம். ஆனால் பெற்றோர் தன் மகனைப் பார்த்து, நீங்கள் உனக்காகப் பல நன்மைகளைச் செய்தி இருக்கிறோம் என்று நினைவுட்டி பின் இவள் உன்னுடைய தங்கைதான். இவளுக்கும் அந்த உணவில் சிறிது கொடுக்கவேண்டும் என்று கேட்டவுடன் அந்தப் பெரிய குழந்தை தன்னுடைய நிலையை உணர்ந்து, தன்னுடைய தங்கைக்கும் சிறிது உணவு கொடுப்பான்.

அதுபோல இந்தக் கருத்தில் பெற்றோராக நம்முடன் இருந்து நமக்கு அறிவு என்ற ஞானத்தை போதிப்பவர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்; பெரிய குழந்தையாக இருப்பது இறைவனாகிய முருகன். மகளாக இருப்பது நாம். இந்த மையக் கருத்தில் நமக்குள் ஒரு கேள்வி தோன்றும். அது என்னவென்றால் ஏன் நாம் முருகனிடம் நம் குறைகளைத் தெரிவிக்க முடியாதா ? முடியம் ; ஆனால் அந்தக் குறைகளை நாம் முருகனிடம் தெரிவிக்கின்ற முறைதான் நம்முள் பலருக்கு தெரிவதில்லை. இதற்கு உதாரணமாக ஒன்று சொல்ல விருமபுகிறேன். நாம் பலதரப்பட்ட மக்கள் சமைத்த உணவை உட்கொள்கிறோம். ஆனால் ஒரு தாய் தன் குழந்தைக்கு சமைக்கின்ற உணவின் ருசிக்கு நிகராக மற்றவ்களால் சமைக்க முடியாது. அதுதான் அவர்களுடைய கைப்பக்குவம்.

அதுபோல் தான் இந்தப் பெருவேண்டுகோள் பதிகமாகும். முருகனின் பெருமைகளை உணர்த்திய பிறகு, இத்தனை அடியார்களுக்கும் அருள்புரிந்த முருகனே என்னையும் நீ மறக்க வேண்டாம் என்று சுவாமிகள் முருகினன் உள்ளம் இளகும்படி இப்பாடலை புனைந்துள்ளார்கள். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் மானசீக குருவாக இருப்பவர் அருணகிரிநாதர். அவர் தான் இயற்றிய திருப்புகழில் கூறும் அடியார்கள் வினை தீர்த்த ஆறுமுகம் ஒன்று என்று முருகனின் முகங்களில் ஒரு முகத்தை குறிக்கும் ஒரு முகமாக இருக்கிறது கூறுமி; என்று வர்த்தைக்கு ஞானிகள் வழிகாட்டும் பால்கள்தான் என்று கெள்ள வேண்டும். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இயற்றிய பொன்மயிற் கண்ணி என்ற தலைப்பிலே முருகனை வெகு எளிதில் காண வேண்டும் என்றால் காலைப்பிடித்தேன் என் காதலால் பொன் மயிலே வருணிப்பதை நாம் இங்கே நினைவு கொள்ள வேண்டும்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாடி அருளிய இப்பதிகத்தை முருகனிடம் நின்று உருகிப் பாடினால், அவன் மனம் இளகி நமக்கு வேண்டியவற்றை அளிப்பான் என்பது உண்மை மற்றும் சத்தியம். மேற்கண்ட பாடலில் ஒவ்வொரு செய்யுளிலும் மிகப் பெரிய ஒரு கருத்தினையும், சரித்திர நிகழ்ச்சிகளையும், உண்மை சம்பங்களைக் கொண்டு சுவாமிகள் நமக்கு உணர்த்தியுள்ளார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மேற்கண்ட பாடலை தாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிளுக்கென்றே தனியாக ஓர் இணையதளம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**